**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** தலைவர்
**K.சந்திரசேகரன்,B.A.,** பொதுச்செயலாளர்
**B.தியாகராஜன்,M.Com.,** நிதிச்செயலாளர்

**சுற்றறிக்கை எண்: 02** நாள்:01-02-2020

அன்புகெழுமிய சங்க உடன்பிறப்புகளுக்கு வணக்கங்களும் வாழ்த்துக்களும். 01-10-2010 முதல் மின்வாரியக் கட்டமைப்பு மூன்று கூறுகளாக பிரிக்கப்பட்டதின் தொடர்ச்சியாக வாரியத்தில் பணிபுரியும் அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர், குடும்ப ஓய்வூதியர் ஆகியோருடைய பாதுகாப்பிற்காக முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்றினை உருவாக்கிட கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக வாரிய நிர்வாகம் ஏற்கனவே கொடுத்திருந்த நகல் ஒப்பந்தத்திற்கு சில திருத்தங்களை முன்மொழிந்து சங்கங்களின் கருத்துக்களை கேட்டிருந்தது. நிர்வாகம் உத்தேசித்துள்ள திருத்தங்கள் குறித்து 30-01-2020 அன்று தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு தொ.மு.ச.பொதுச்செயலாளர் உடன்பிறப்பு திரு.சிங்கார.இரத்தினசபாபதி அவர்கள் தலைமையில் கூடி திருத்தங்களை ஏற்றுக் கொள்வதில்லை என்று முடிவெடுத்து இரண்டுமாத கால அவகாசத்திற்குள் சங்கங்களை அழைத்து பேச்சு வார்த்தைகள் நடத்தி முத்தரப்பு ஒப்பந்தத்தை உருவாக்கிட நிர்வாகத்தை வற்புறுத்திட முடிவெடுத்தது.

08-08-2019 அன்று வேலை நிறுத்தம் செய்திட கொடுத்திருந்த அறிவிப்பு தொடர்பாக 31-01-2020 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த பேச்சுவார்த்தைகள் தொழிலாளர் துறை இணை ஆணையர் அவர்கள் பதவி உயர்வில் சென்றுவிட்டமையால் 05-03-2020ம் நாளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த முறை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் சமயம் பகுதிநேரத் துப்புரவு ஊழியர்களின் பிரச்சனைகள் தொடர்பாக தலைமைப்பொறியாளர் பணி அமைப்பு அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி கோரிக்கைகள் மீது முடிவெடுத்திட ஏற்றுக் கொள்ளப்பட்டதின் படி கடந்த 23-01-2020 அன்று தலைமைப்பொறியாளர், பணிஅமைப்பு அவர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில்,

(1). 15-10-2015க்குப்பின் பணியில் சேர்ந்தவரகள் என்று கூறி காலவரை ஊதியம் வழங்கப்படாதவர்களுக்கு தொழிலாளர்துறை சேலம் துணைஆணையர் அவர்களின் ஆணைப்படி ஊதியம் வழங்கிடவும் (2). ரூ.1000ம் தொகுப்பூதியம் பெற்றுக் கொண்டு துப்புறவு பணிஆற்றிவருபவர்களை காலவரை ஊதியத்தில் நியமித்திடவும், (3).துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்படாத அலுவலகங்களுக்கு பொறுப்புகளை நிரப்பிடவும் விபரங்கள் கேட்கப்பட்டுள்ள 18 வட்டங்களிலிருந்தும் விபரங்கள் பெற்று பொறுப்புகளை நிரப்பிடவும் (4).தமிழக அரசு சத்துணவு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து பலன்களையும் வாரியத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அமுல்படுத்திட நடவடிக்கை எடுத்திடவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அனல்மின்வட்ட மத்திய அலுவலகங்கள், மத்திய பண்டகசாலை, சிறப்பு பராமரிப்பு பிரிவு, பணிமனைவட்டம் ஆகியவற்றின் அலுவலக பணிநேரம் மாற்றம் குறித்து வாரியத்தலைவர் ஒப்புதல் அளித்துள்ளதாகவும், அடுத்துக் கூடவுள்ள வாரியக் கூட்டத்தில் அனுமதிப்பெற்று ஆணை பிறப்பிக்கப்பட உள்ளது எனவும் அறிய வருகிறோம்.

மற்றபடி பல்வேறு பணித்தொகுப்புகளுக்கும் வழங்கப்படவேண்டிய பதவி உயர்வுகள் தொடர்பாக கீழ்கண்ட விபரங்களை தெரிவித்திட விரும்புகின்றோம்.

**I. கணக்குப்பிரிவு:-**

(அ).உதவியாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வு பட்டியல் அனுமதி தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் தடை உத்திரவு தொடர்வதால் பட்டியல் அனுமதிக்கப்படாமல் உள்ளது.

(ஆ).கணக்கு மேற்பார்வையாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட 06-03-2019ல் கேட்கப்பட்ட தகுதிகாண் அறிக்கையில் ஏறத்தாழ 50 உதவியாளர்கள் மட்டுமே பதவி உயர்வு பெற தகுதி உடையவர்கள் எனத் தெரியவருகிறது. அவர்களுக்கு டி.பி.சி. ஒப்புதல் பெற்று விரைவில் பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்பட உள்ளது.

(இ).உதவிகணக்குஅலுவலர் பதவி உயர்விற்கு 111 நபர்களுக்கு கேட்கப்பட்ட தகுதிகாண் அறிக்கையில் 22 நபர்களுக்கான விபரம் முழுமையாக கிடைக்காததால் பதவி உயர்வு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.
(ஈ).கணக்கு அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட அனுமதிக்கப்பட்ட பட்டியலில் இடம்பெற்ற அனைவருக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுவிட்டது. பதவி உயர்வு பட்டியல் அனுமதித்திட தகுதிகாண் அறிக்கை கேட்கப்படஉள்ளது.
(உ).துணைநிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட 26 நபர்களுக்கு பட்டியல் அனுமதிக்கப்பட்டு 24 நபர்களுக்கு பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்பட்டுள்ளது.

**II. நிர்வாகப்பிரிவு:-**
(அ).உதவியாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வு பட்டியல் அனுமதி தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தடைஉத்திரவு உள்ளதால் பட்டியல் அனுமதிக்கப்படாமல் உள்ளது.
(ஆ).நிர்வாக மேற்பார்வையாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வு அளித்திட அனுமதிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்ற அனைவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுவிட்டது. புதிய பட்டியல் அனுமதித்திட தகுதி காண் அறிக்கை கேட்கப்பட உள்ளது.
(இ).உதவிநிர்வாகஅலுவலர் பதவி உயர்வு வழங்கிட தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ள 65 நபர்களுள் 4 நபர்களுக்கு மட்டுமே அறிக்கை வந்துள்ளது.
(ஈ).முதுநிலை நிர்வாக அலுவலர் பொறுப்பிற்கு 17 நபர்களுக்கு பதவி உயர்வு பட்டியல் அனுமதிக்கப்பட்டு 9 நபர்களுக்கு பதவிஉயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**III. <u>அட்டைப்பட்டியல் பிரிவு:</u>**
(அ).கணக்கீட்டு ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட தகுதிகாண் அறிக்கைகள் பெறப்பட்டவர்களுக்கு DPC முடிந்து பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டுக்ளதாக அறிகிறோம்.
(ஆ).வருவாய் மேலாளர் பதவிஉயர்வு வழங்கிட தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட உள்ளது.
(இ).மதிப்பீட்டு அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட 10 நபர்களுக்கு விபரங்கள் வரவேண்டி உள்ளது.
(ஈ).முதுநிலை மதிப்பீட்டு அலுவலர் பொறுப்பிற்கு 14 நபர்களுக்கு பதவிஉயர்வு பட்டியல் அனுமதிக்கப்பட்டு 9 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படஉள்ளது.

**IV.** இளநிலைப்பொறியாளர் Iம் நிலை பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட 520 நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை மீண்டும் கேட்கப்பட்டுள்ளது. இளநிலைப்பொறியாளர் IIம் நிலை பொறுப்புகள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பொறுப்பிற்கு உள்முகத் தேர்வு மூலம் நியமனம் வழங்கிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கேங்மேன் நியமனம் குறித்து சங்கங்கள் தொடர்ந்த வழக்குகளும், கணக்கீட்டாளர் நியமனத்திற்கான கல்வி தகுதி மாற்றம் குறித்து நமதுசங்கம் தொடர்ந்த வழக்கும் உயர்நீதிமன்ற முதல் பெஞ்சில் அடுத்த வாரம் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கிறோம்.

தோழமையுள்ள,

பொதுச்செயலாளர்.

பெறுநர்: மத்திய அலுவலக கிளைச்செயலாளர்கள். உதவிகோட்டச் செயலாளர்கள், கோட்டச் செயலாளர்கள், வட்ட மகளிரணிச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள், மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்தியசங்கப்பொறுப்பாளர்கள்.